விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 பங்குனி 13 ஜ. அவ்வல் 29 இதழ் 42

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 26—3—82


## பனம்பொருள் அபிவிருத்தி: புதிய தலைவர் நடவடிக்கை

[கொழும்பு]

பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் புதியதலைவராக நியமனம்பெற்ற திரு. கே. நடராஜா, தனது முதலாவது மகாநாட்டை மட்டக்களப்பில் நடத்தினுர்.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. அந்தோனிமுத்து தலைமையில் நடைபெற்ற இம் மகாநாட்டில் பனம்பொருள் அபிவிருத்தி குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் பனம் பொருள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறையில் பனம் சாராய வடிசாலை ஆரம்பித்துவைக்கப்படும்வைபவத்தில் பனம்பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. நடராஜா, சில புதியதிட்டங்களையும்அறிமுகஞ்செய்துவைப்பாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

# புளியங்குளம் பண்ணையில்

# ஆயுதப்படையினர் 'வேட்டை'

## சக்திவாய்ந்த வெடி

### மருந்துகள் கைப்பற்றப்பட்டன

(மாங்குளம்)

**புளியங்குளம் பகுதியில் பொலிசாரும் இராணுவத்தினரும் நேற்று மேற்கொண்ட கூட்டு நடவடிக்கைகளைத் தொடர்ந்து அதிமுக்கிய இரகசியத் தகவல்கள் கிடைத்துள்ளதுடன், ஏராளனமான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று ஆயுதப்படையினர் தெரிவித்தனர்.**

இந்த 'வேட்டையில்' மூன்று வாலிபர்கள் தப்பி ஓடியதாக ஆயுதப்படையினர் நேற்றுத் தெரிவித்தனர்.

புளியங்குளம் பகுதியில் மாங்குளம் பொலிஸார் இராணுவத்தினரின் உதவியுடன் மேற்கொண்ட 'திடீர் வேட்டை'யில் புளியங்குளம் 128வது மைலில் அமைந்துள்ள ஒரு பண்ணையில் கடுமையான சோதனை நடைபெற்றதென்றும், இத்திடீர் வேட்டையின் போது மூன்று வாலிபர்கள் தப்பி ஓடியதாகவும் விசாரணை

(8ம் பக்கம் பார்க்க)

## 'ஹன்சாட்'பிரதியை ஏற்கமுடியாதெனதீர்ப்பு

[கொழும்பு)

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின்போது நடைபெற்ற அசம்பாவிதம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் 'ஹன்சாட்' பிரதியை சாட்சியாக ஏற்கமுடியாது, என்று யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலை ரத்துச்செய்யக்கோரி தாக்கல் செய்யப்

(8 பக்கம் பார்க்க)

## அமைச்சர் 'ரணில்' வவுனியா விஜயம்

(வவனியா)

செட்டிகுளத்தில் இம்மாதம் 31-ம் திகதி நடைபெறவிருக்கும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பரிசளிப்பு விழாவில் இளைஞர் விவகார வேலை வாய்ப்பு அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இவ்விழாவில் வவனியா மாவட்ட அமைச்சர் திரு. மகிந்த சோமா, வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம், வவனியா அரசாங்க அதிபர் திரு. லோகேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

(க)

## ஆயுதம் வைத்திருந்தால் மரணதண்டனை!

### அரசியல்நடவடிக்கைகளுக்கும் தடை

டாக்கா, மார்ச் 25

பங்களாதேஷில் அரசியல் நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளதுடன், நிர்வாகத்திற்கு வசதியாக விசாரணைமன்றங்களும் அமைக்கப் படவிருக்கிறது.

ஆயுதம், வெடிமருந்து வைத்திருப்போருக்கு மரண தண்டனை விதிக்கப்படுமென்று நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுள்ள ஜெனரல் முகமது எரிஷாத் அறிவித்துள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)


## சுங்க ஏலவிற்பனை

2, 3,—4—82 ம் திகதிகளில் காலை பத்துமணியளவில் யாழ்ப்பாண சுங்க அலுவலகத்திலும் தொண்டமானறு கடற்கரையிலும் பகிரங்க ஏலத்தில் பொருட்கள் விற்பனைசெய்யப்படும். விற்பனையின் முழு நிபந்தனைகளும் 1954ம் ஆண்டு மே மாதம் 28ம் திகதி வெளியிடப்பட்ட 10675 ம் இலக்க அரசாங்க வர்த்தமானப்பத்திரிகையில் 1—ம் பிரிவு 2 ல் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

| பொருட்கள் | இடம் | திகதி |
|---|---|---|
| 1. கால் சட்டைத்துணிகள்<br>2. சேலைகள்<br>3. கசெற் றேடியோக்கள்<br>4. பழுதடைந்த ஜீப்வண்டி 5ஸ்ரீ 9691<br>5. பாவித்த இரும்புச் சட்டங்கள் | யாழ்ப்பாண சுங்க அலுவலகம் | 2.4.1982 வெள்ளிக்கிழமை |
| II. பழுதடைந்த மோட்டார் வள்ளம் J.P.P.W. 622 | தொண்டமானறு கடற்கரை | 3.4.82 சனிக்கிழமை |

எஸ். எம். ஜே. சேனரத்ன

சுங்க சேகரிப்பாளருக்காக.

யாழ். மாவட்டம்.

சுங்க அலுவலகம்.

யாழ்ப்பாணம்.

2642


## கான்ஸ்டபிள்'நாதன்'கொலை:

### பொலிஸ் வலையில் முக்கிய நபர்?

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் கான்ஸ்டபிள் எஸ். மகேஸ்வரநாதன் கொலை தொடர்பாகத் தேடப்படும் சிலரில் முக்கியமான ஒருவர், எந்த நிமிடத்திலும் கைது செய்யப்படலாமென்றும், பொலிஸ் வலையில் அவர் சிக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வடபகுதியில் நடைபெற்ற கொள்ளைகள், கொலைகள் சம்பந்தமாக ஆயுதப்படையினரால் தேடப்பட்டுவரும் ஒருவர் இக்கொலையில் முக்கிய இடம் வகித்திருக்கிறுர் என்றும், அவர் தங்கியிருக்கும் இடங்கள் பற்றி இரகசியத் தகவல் கிடைத்துள்ளதாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கடந்ததிங்கட்கிழமை இரவு தனது கடமையை முடித்துக் கொண்டு வீடு சென்ற மகேஸ்வரநாதன் வட்டுக்கோட்டையில் வைத்துத் துப்பாக்கியால் யால் சுட்டுக்கொல்லப்பட்டது தெரிந்ததே.

'நாதன்' கொலைசெய்யப்படுவதற்குச் சில தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்ட சந்தேகநபரை 'நாதன்' யாழ்ப்பாணத்தில் சந்தித்ததாகவும், இவர் பொலிஸாரின் உதவியுடன் சந்தேகநபரைப் பிடிக்கச் சென்றபோது தப்பியோடிவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

குறிகாட்டுவான் இராணுவ வீரர் துப்பாக்கிச் சூட்டுக் கொலைச் சம்பவம், காங்கேசன்துறை கி.மு.ச. கொள்ளை முயற்சிச் சம்பவம் மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாகச் சந்தேகநபர் ஆயுதப்படையினரால் தேடப்

(8ம் பக்கம் பார்க்க)


## திருமண அழைப்பும் வரவேற்பும்

எமது மகன் செல்லையா வாமனுனந்தனுக்கும் வைத்திலிங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி செந்திற் செல்வி அவர்களுக்கும் 27 - 3 - 82 சனிக்கிழமை காலை 7.28--8.56 இடையில் உள்ள சுபமுகூர்த்த வேளையில் நல்லூர் நல்லையாதீனத்தில் நடைபெறவிருக்கும திருமணத்தில் கலந்து சிறப்பிக்குமாறும் 28 - 3 - 82 மாலை 5-7 மணிவரையில் சங்கானையில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறும் வரவேற்பு உபசாரங்களிலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

வி.செல்லையா

செல்லையாவும் பாரியாரும்

(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)

"இராஜஸ் தான்"

மாலியவத்தை

சங்கானை.

2670

### மணிவாக்கு

வெள்ளை நிறமல்லிகை யோவேறெந்த
மாமலரோ
வள்ளலடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளை நிறப் பூவுமல்லவேறெந்த
மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனுர்வேண்டுவது

— விபுலாநந்த அடிகள்

# நமது நோக்கு

## விபுலாநந்த இசைக்கல்லூரி

மட்டக்களப்பு விபுலாநந்த இசைக்கல்லூரிக்கு இன்று நடைபெறும் அடிக்கல் நாட்டுவிழா அடிக்கல்லுடன் அமைந்து விடாது ஒரு கம்பீரமான இசைக் கல்லூரியாக கட்டி எழுப்பப்படவேண்டுமென்று பிரார்த்திக்கிறேம்.

அதேபோல் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனில் தற்காலிகமாக இயங்கவிருக்கும் விபுலாநந்த இசைக்கல்லூரி நிரந்தரமாகி விடும் நிர்ப்பந்தம் எவ்வகையிலும் ஏற்படக்கூடாதென்பது மற்றைய பிரார்த்தனை.

நாடு முற்றிலும் நாட்டப்பட்டிருக்கும் அடிக்கல்லை தேடிச்சேகரிக்க முடியுமானுல் அவற்றைக் கொண்டே ஒரு பெரும் மண்டபம் அமைக்கலாம். அத்துடன் அக்கற்கள்சொல்லும் கதைகளும் ஒரு விசித்திரமான நூலுக்குப் போதிய உள்ளுடனுகும்.

நாவலர் மணிமண்டபத்துக்கு அடிக்கல் நாட்டு விழா மிகச் சிறப்பாக நடந்ததும் வேலை ஆரம்பமானதும் கடந்த ஆட்சியில் நடந்த நிகழ்ச்சிகள் அவ்வளவுந்தான்! இன்றைய ஆட்சியின் கடைசிக்கந்தாயத்தில் அதனை நிறைவுறச் செய்யும் பணி மீண்டும் ஆரம்பமாகியிருக்கிறது சந்தேகத்துக்குரிய காரியம்.

இலங்கையின் தேசிய வாழ்வுக்கும், தமிழ் மக்களின் மொழி, மதம், கலை கல்வி, கலாசாரத்துக்கும் தங்களை அர்ப்பணித்த அதிமனிதர்கள் நல்லூர் ஆறுமுகநாவலர், மட்டுநகர் விபுலாநந்த அடிகள்.

இவ்விரு மகான்களின் மகிமை இவ்வித நினைவுச் சின்னங்களில் உறைந்து விட்டால் அது அவர்களை மக்கள் மறந்து விட்டார்களென்பதற்கு நிகராகும்; எனவே இவர்களின் சேவையை மதிக்கும் அரசு எந்தக்கட்சியரசாலுைம் சரி இந்தநினைவு ஸ்தாபனங்கள் இப்பெரியோரின் சாதனைகளை தொடர்ந்து புரியும் பணியில் தீவிரமாக ஈடுபடுத்த மக்களுக்கு உதவ வேண்டும்; அந்த உதவியை நல்க அரசு முன்வந்தால் அதனைப் பூர்த்தி செய்யும் பொறுப்பு மக்களுடையதே!

நாவலர் பெருமானைப் போல விபுலாநந்த அடிகள் ஈழத்திலும் இந்தியாவிலும் பெரும் புகழ் பெற்றவர். மட்டுநகரில் பிறந்து வளர்ந்து அங்கு கல்விக்கு அளப்பரிய பணிபுரிந்த அடிகள் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய சாதனைகள் என்றும் மறக்கமுடியாதவை.

தமிழே தங்களது உயிரெனக் கொண்டு எத்தனையோ அறிஞர்கள் வாழ்ந்த இந்நாட்டில் அறிஞராகவும் ஆராய்ச்சியாளராகவும், கவிஞராகவும், பத்திரிகை ஆசிரியராகவும் பேச்சாளராகவும் திகழ்ந்து தமிழை அழகுற வளர்த்தவர் விபுலாநந்த அடிகள்.

விபுலாநந்த அடிகளின் கலைஞானம், அறவாழ்வு தமிழ்ப்பணி பலர் அறிந்த விடயம்; ஆயினும் அவர் ஒருதனித்துவம் வாய்ந்த கவிஞர் என்பதை இன்றைய இளஞ் சந்ததியினர் உணர வாய்ப்பு அளிக்கப்படவேண்டும்.

தெய்வீகக் கலைஞரான அடிகள் ஒரு லண்டன் விஞ்ஞான பட்டதாரி; மதுரைத் தமிழ் பண்டிதர்; யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தைக் கட்டிஎழுப்பிப் பலரைப் பண்டிதர்களாக்கும் முயற்சியில் வெற்றிபெற்ருர்; இலங்கைப் பல்கலைக்களகத்தின் முதற் தமிழ்ப் பேராசிரியர்.

ஆங்கில இலக்கியத்தையும் சிறப்பாக ஷேக்ஸ்பியரின் நாடகங்களையும் நன்ருய் ஆராய்ந்த சுவாமிகள் அவற்றின் நலன்கள் பொதிந்த ஒரு அரிய நூலாகிய மதங்க சூளாமணியை எழுதிக் கவிஞர் உலகத்தின் கண்ணேட்டத்துக்கு ஒரு புதிய திருப்பம் ஏற்படுத்தினர்.

இலங்கைக்கு மகாத்மா காந்தி வந்தபோது, யாழ்ப்பாண மாணவர் மகாநாட்டின் தலைவர் என்றவகையில் அடிகளார் காந்தியை வரவேற்றது தேசிய சரித்திரத்தில் இடம்பெறவேண்டிய நிகழ்ச்சி.

இந்த அற்புதப் பின்திரையை இந்த நாட்டின் கடந்தகால வரலாறு காட்டுகின்றபோது, தமிழையும் தமிழரையும் புறக்கணிக்கும் இன்றைய அரசியல் குழப்பநிலையிலும், யாழ் நூலினைஇசை உலகுக்களித்த அடிகளாரை எந்த அரசும் மறக்க முடியாதென்பதை இன்று ஆரம்பமாகும் விபுலாநந்த இசைக் கல்லூரி இடித்துரைக்கின்றது.

## விபுலாநந்தர் இசை நடனக் கல்லூரி

# மட்டுநகர்மக்களின் நீண்டகால இலட்சியம் இன்றுடன்பூர்த்தி!

ஈழமணித் திருநாட்டில் பல தமிழ் பெரியார்கள் தோன்றி தமிழுக்கும் சைவ சமயத்திற்கும் அரும் தொண்டு புரிந்தவர்கள். அவ்வரிசையில் கிழக்கு மாகாணத்தில் மட்டுநகர் அன்னை பெற்றெடுத்த தவப்புதல்வன் வித்தகர் விபுலானந்த அடிகளார் ஒருவர்.

அப்பெரியார் மறைந்து பல வருடங்களாகி விட்டன. அந்த பெருமகனை கௌரவிப்பதற்காக இரண்டு எண்ணங்களை கொண்டிருந்தார்கள்.

அப்பெரியாருக்கு நினைவு முத்திரை, அடுத்தது அவர் பெயரில் இசை நடனச்கல்லூரி அமைப்பது. ஆனுல் இவையிரண்டும் கனவாகவே இருந்தது தவிர நனவாகவில்லை. மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களிடம் கோரிக்கை விடுத்ததுதான் மிச்சம்.

இந் நிலையில் மட்டுநகர் முதல்வராக தொடர்ந்து 25 வருடங்களுக்கு மேலாக பாராளுமன்றஉறுப்பினராக விருந்த திரு. செ. இரா்சதுரை 1979ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியை விட்டுவிலகி அரசாங்கத்திடம் சேரமுன்பு மட்டக்களப்பு வாழ்மக்களின் நீண்டகால அபிலாஷை எண்ணம் ஆசைகள் அடங்கிய பட்டியல் ஒன்றை ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனுவிடம் சமர்பித்தார். பத்து விபரங்கள் அடங்கிய பட்டியலில் சில பூர்த்தியடைந்து விட்டன.

இப்பட்டியலில் இரு விபரங்

**-இரா. உதயகுமார்-**

கள் வித்தகர் விபுலானந்தர் அடிகளாருக்கு வழங்க வேண்டிய கௌரவத்தை கொண்டது.

அன்னருக்கு முத்திரை வெளியிட வேண்டும். இது நிறைவு பெற்றுவிட்டது. 1980ம் ஆண்டு அன்னரின் உருவப்பொறித்த முத்திரை வெளிவந்துவிட்டது.

இரண்டாவது, வித்தகர் விபுலானந்தர் இசை நடனக்கல்லூரி. அந்த எண்ணமும் (26.2.1982)இன்றுடன் பூர்த்தி செய்யப்படுகின்றது.

பிராந்திய அபிவிருத்தி தமிழ் மொழி அமுலாக்கல் இந்துக்கலாசார அமைச்சு 1979ம் ஆண்டு யூலை ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை தனது குறுகியகாலத்துள் தன் பணியை அதன் அமைச்சர் திரு. செ. இராசதுரை திட்டமிட்டு துரிதமாகசெயல்படுத்தி வருகின்றூர்.

இக் கல்லூரி இன்று காலை 10 பணிக்கு இராமகிருஷ்ண மிஷன் தலைமைப்பீட சுவாமி சித்திபெற்ற 125 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் க. பொ. த. (சாதாரண பரீட்சையில்] ஆறு பாடம் அல்லது தே. க. பொ. த. பரீட்சையில் எட்டுப்பாடமும் சித்திபெற்றிருக்க வேண்டும். அவற்றில் தமிழ் மொழியும் கணிதமும் அடங்க வேண்டும்.

சுவாமி விபுலானந்தர் இசை நடனகல்லூரியில்வாய் பாட்டு வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம் என்பன போதிக்கப்படும். நான்கு வருடகாலப் பகுதியைக் கொண்ட இந் நெறியில் மாணவர் ஒருவர் சிறப்புபாடமாக வொன்றையும் துணைப்பாடமாக மற்றொன்றும் தெரிவு செய்ய வேண்டும் சித்திபெறும் மாணவர் இசைக்கலைமாமணி' பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுவர்.

இக் கல்லூரியில் சேர 175 மாணவர்கள் விண்ணப்பம் செய்த போதிலும் எழுத்துப் பரீட்சை செய்முறை பரீட்சை வாய்மொழிப்பரீட்சை மூலம் பிரேமாத்மானந்தஜீ தலைமையில் விபுலானந்தர் மணிமண்டபத்தில் அமைச்சர் திரு செ. இராசதுரையினுல் ஆரம்பித்து வைக்கப்படுவதோடு அமைச்சரினுல் சகல வசதிகள் நவீன திராவிடக்கலை கட்டிட அம்சம் கொண்ட நிரந்தரக்கட்டிடத்திற்கான அத்திவாரக்கல்லும் நாட்டப்படுகின்றது.

இதற்கான வரைப்படத்தை கட்டிடக்கலைஞர் திரு. வி. எஸ் துரைராஜா வரைந்துள்ளார்.

முழு நேர விரிவுரையாளர்களைக்கொண்ட இக்கல்லூரியின் முதல்வராக தமிழக ஆஸ்தான வீணை வித்துவான் அண்ணுமலை பல்கலைக்கழக பேராசிரியர் விபுலானந்தரின் யாழ். நூலை யாழில் இசைத்த வித்துவான் பொன். சிவானந்தம் அமைச்சரவையின் அங்கிகாரத்துடன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. எய. ஜி. இராமச்சந்திரன் தனது அரசாங்கத்தின் மூலம் ரூபாய் 50 ஆயிரம் பெறுமதியான கர்நாடக இசை வாத்தியக்கருவிகள் பாடநூல்களை இன்பளிப்பு செய்துள்ளார். தமிழக இராசாமுத்தையா செட்டியாரும் பல பாட நூல்களை அன்பளிப்பு செய்துள்ளார். ஆறு மாதத்திற்கொரு தடவை தமிழகத்திலிருந்து பேராசிரியர்கள் வருகை தந்து விரிவுரைகளை நடத்துவர்.

இன்று நடைபெறும் ஆரம்ப விழாவில் உள்நாட்டு அலுவல்கள் மந்திரி திரு. கே. டபிள்யூ. தேவநாயகம, மட்டுநகர் 2—வது எம். பி. ஜனுப் பரீட் மீராலெப்பை, மட்டக்களப்பு மாவட்ட மந்திரியும் பிரதி தபால் தந்தி தொலைத் தொடர்பு அமைச்சருமான ஜனுப் அப்துல்மஜீத், ஒய்வு பெற்ற அதிபர் திரு. எம். கணபதிப்பிள்ளை, மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஜீவானந்தஜி ஆகியோர் சிறப்புரை வழங்குவர்.

சிறப்பு நிகழ்ச்சியாக சீர்காழி கோவிந்தராஜன் இன்னிசையும், வெண்ணிறஆடை நிர்மலாவின் பரதநாட்டியமும், மட்டக்களப்புபாரம்பரிய கலை விழாவும் இடம்பெறும்.

இக்கல்லூரி தொடர்பாக பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை நெரிவிக்கையில், மட்டக்களப்பு தமிழகம் அருட்திரு விபுலானந்த அடிகளாரை பெற்றதால் பெருமை பெற்றது, இலங்கை மணித்திருநாட்டிற்கு நிலையான புகழைத் தேடிக கொடுத்தார். அப்பெரியாரின் பெயரால் இசைக் கல்லூரி என்ற கலைக்கோயில் ஒன்று இன்று ஆரம்பிக்கப் படுவது எல்லோருக்கும் இனிப்பான செய்தியாகும்.

மட்டக்களப்பு மாவட்டம் இதுவரை சரித்திரம் காணுத வகையில் அழியாத ஒரு நிகழ்ச்சியாகஇதுஅமையவேண்டும்.

எமது மக்களின் நீண்டகால எண்ணம் அபிலாஷை இலட்சியம் கனவு இன்றுடன் பூர்த்தி அடைகின்றது. இக்கல்லூரியில் இன தம மொழி வேறுபாடின்றி இசைத்துறையில் நாட்டமுள்ள அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுமென்ருர். (உ)

## மக்கள் கருத்து

### துணிவான கருத்து

24.03.82 புதன்கிழமை 'ஈழநாடு' பத்திரிகையில் நமது நோக்கு பகுதியில் நீங்கள் வெளியிட்ட கருத்துக்கள் மிக மிக சரியான கருத்துக்களே. மக்கள் அபிலாஷைகளை மதித்து அவர்களின் கோரிக்கைகளை பெறும் பணியில் சோர்வடைந்தவர்கள், சர்ந்தர்ப்ப வாதிகளாக மாறியவர்கள். எவரும் இந்நாட்டு அரசியல் வரலாற்றில் மண்கவ்வவைக்கப்பட்டார்கள். இது தொடர்ந்தும் நடைபெறும் என்பதும் துணிபானதே. இதை ஆட்சியாளர்களும் அரசியல் வாதிகளும் உணரும் படி செய்யவேண்டுமென்பதற்காக மேற்படி கருத்துக்களை வரைந்ததற்கு எனது நன்றிகள்.

க. வே. சிறீஸ்கந்தராஜா
தென் புலோ, புலோலி.

## பாரதத் திருவிழா

திருவிழாக்காலம் இங்கு மட்டுமல்லஉலகெங்கிலும் நடைபெறும் 'சீசன்' இது; லண்டனில் நடைபெறும் பாரதத் திருவிழாவைக் கண்டுகளிக்கப்போனமும் மூர்த்திகள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி, பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மக்ரரட் தட்சர், இளவரசர் சாள்ஸ்

இவர்களுக்கு தக்க வரவேற்புக் கிடைத்ததாகக் கூறும் செய்திகள், கூழ் முட்டையே வரவேற்பில் இடம்பெற்றதாக குறிப்பிடுகின்றன.

எதிர்ப்புத் தெரிவிக்கும் மக்கள் கூட்டம், தலைவர்களுக்கு கூழ்முட்டை எறிவது பிரிட்டிஷ் நாகரிகமுறையென்ற மரபைப் பின்பற்றுகிறது.

கூழ்முட்டைக்கு இலக்கான மூவரில் எவரும் சுத்தபோசன காரராகவில்லாததால் எவ்வித அசௌகரியமும் ஏற்பட்டிருக்காது. அது அவர்களில் முதல் அனுபவமாகவும் இருக்காது,

இந்தியப் பிரதமரை எதிர்க்கும் ஒரு கும்பல், பிரிட்டிஷ் பிரதமரை பதவி நீக்கமுயலும் பெரும் பட்டாளம், தமது சிரேட்ட மகவைக் காத்திருக்கும் இளவரசர் சாள்ஸ் இவ்விரு 'இரும்புப்' பெண் பிரதமர்களுக்கிடையே அகப்பட்ட நிலையை, தக்கதருணமாகக் கொண்டு 'கூழ்முட்டைக் குண்டை' பிரயோகித்தது பெரிய திருவிழாவுக்குள் ஒரு சிறிய விழா.

இரு பெண் பிரதமர்களும் காரசாரமாக பிரிட்டிஷ், இந்தியா விவகாரங்களை விவாதித்தபின் நிருபர்கள் திருமதி தட்சர் உண்மையில் ஒரு 'இரும்புப்பெண்' தானு என்று வினவினராம்;

அதற்கு விடையளித்த இந்திரா ''அப்படியல்ல; அவர் ஒரு கண்டிப்பாளர், இறுக்கமான கொள்கையுடையவர்'' என்று கரும்பின் இனிய மொழியில் நிருபர்களுடன் அளவளாவினுராம் மற்றைய கேள்விக்கிடமளிக்காமல், இனம் இனத்தை நாடினதல்லாமல், காக்கும் கடமையையும் நிறைவேற்றிவிட்டது.

மூன்று 'மை,கள் ரொம்ப உள்ள இவ்விரு பெண்பிரதமர்களில் ஆண்மை, தாய்மை, பெண்மை, என்ற வரிசையில் அவை இடம் பெறுவது சரிபோல் தெரிகிறது.

மாவை

### கொல்லங்கலட்டியில் வசந்த நவராத்திரி

(தெல்லிப்பழை)

மாவை. கொல்லங்கலட்டி ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் சிதம்பரேஸ்வரசுவாமி கோவில் வசந்த நவராத்திரி விழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது. அடுத்த மாதம் 2ம் திகதிவரை நடைபெறவிருக்கும் இவ்விழாவில் இலட்சார்ச்சனை சங்காபிஷேகம், திருக்கல்யாணம் முதலியன இடம்பெறும்.

இறுதி நாளன்று விசேஷ ஆராதனைகள், ஸ்ரீ சக்கரபூசை ஹோமங்கள் நடைபெறும்.

(அ)

# தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கு ரூ. 4 கோடி 60 லட்சம் ஒதுக்கீடு

## இலங்கை, மலேசியா, சிங்கப்பூரில் ஆராய்ச்சி

சென்னை மார்ச் 25

தஞ்சையிலுள்ள தமிழ் பல்கலைகழகத்திற்கு 4 கோடி 60 லட்டம் ரூபாவைச் செலவிட பல்கலைக்கழக சிண்டிகேட் சபை அங்கிகரித்துள்ளது.

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை நாடுகளுக்கு சென்று தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி நடத்த மூத்த உறுப்பினர் ஒருவரை அனுப்புவதென்றும் சபை முடிவுசெய்துள்ளது.

மருத்துவம், பொறியியல் பிரிவுகளில் தமிழ்பாட நூல் களைத்தயாரிக்க ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (க)

# ரூ. 50 லட்சம் செலவில் பாரதி ஆராய்ச்சி நிலையம்

பாண்டிச்சேரி மார்ச் 25

புதுச்சேரியில் 50 லட்சம் ரூபா செலவிலான பாரதி ஆராய்ச்சி நிலையத்திற்கு பாரத ஜனதிபதி திரு. சஞ்சீவரெட்டி அடிக்கல் நாட்டினர்.

ஜனதிபதி திரு. சஞ்சீவ செட்டி இவ்விழாவில் பேசுகையில் பாரதம் பற்றிய பாரதியின் கனவு நனவாக சமூகப் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணும் பணியில் ஈடுபட்டுள்ளதாக கூறினர்.

புதுவை முதல் அமைச்சர் திரு. டி. இராமச்சந்திரன் கல்வி அமைச்சர் திருமதி ரேணுகா அட்பாத்துரை ஆகியோரும் பேசினர்கள். (க)

# ஒத்திவைப்பு பிரேரணைக்கு அனுமதி மறுப்பு

சென்னை மார்ச் 25

வட ஆற்காட்டில் அசர பஸ்கள் சேதப்பட்டதுபற்றி சட்டப் பேரவையில் 17 உறுப்பினர் கொண்டுவந்த ஒத்திவைப்பு பிரேரணைக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

போக்குவரத்து அமைச்சர் திரு. முத்துசாமி பேசுகையில் அரசு பஸ் ஒன்று ஒருவரை மோதியதால் சாரதியும் நடத்துனரும் தாக்கப்பட்டதாகவும் அப்பாதையால் வந்த 7 பஸ்கள் அங்கு நின்ற கூட்டத்தினரால் சேதப்படுத்தப்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

பொலிஸார் விசாரணை செய்து சந்தேகநபர்கள் மீது வழக்குத்தாக்கல் கெய்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்ததை தொடர்ந்து ஒத்திவைப்பு பிரேரணைக்கு அனுமதி மறுக்கப்பட்டது, (க)

# ஜவுளி கடத்தல் 6 இலங்கையர் கைது

சென்னை மார்ச் 25

பல லட்ச ரூபா ஜவுளி கடத்தல் தொடர்பாக 6 இலங்கை பிரஜைகள் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெருந்தொகையான ஜவுளிகளையும் ஆடம்பரப் பொருட்களையும் அரசு அதிகாரிகள் கைப்பற்றியதைத்தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் 11 பேர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர் 11 பேரும் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (க)

# ஈராக்-ஈரான் யுத்த விளைவுகள்

பேய்ரூத், மார்ச் 25

ஈராக்—ஈரான் யுத்தம் இரு நாடுகளிலும் பொருளாதாரத்தை சேதப்படுத்தியுள்ளன. எண்ணெய் உற்பத்தி செய்யும் இரு நாடுகளிலும் உற்பத்தி இப்பொழுது பெருமளவு வீழ்ந்து விட்டதை புலன் விபரங்கள் நிரூபித்துள்ளன.

யுத்தமேற்பட்ட பின்னர், ஈராக்கும் ஈரானும் கடந்தவருடம் மொத்தம் 10,00,00,000 தொன் எண்ணெயை உற்பத்தி செய்தன. இது 1980 உற்பத்தியில் சரிபாதியாகும்.

1960ம் ஆண்டு முக்கியமான ஆண்டாக இருந்தது. அந்த வருடத்தில் பிரிட்டிஷ், அமெரிக்க நாடுகளுக்கு எதிராக எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் நிறுவனமாக "ஒபெக்" நிறுவப்பட்டது. ஈராக்கும், ஈரானும் அதன் ஸ்தாபர்களாக இருந்தன. யுத்தத்தின் எதிரொலியாக இருநாடுகளின் பொருளாதாரம் 20 ஆண்டுக்குப் பின் தள்ளிப்போடப்பட்டுள்ளன.

போர் காரணமாக எண்ணெய் ஏற்றுமதி தடைப்பட்டுள்ளது. இதன் காரணமாக இரண்டு நாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் 3000 கோடி டாலர் என்று கணிக்கப்பட்டுள்ளது.

# பங்களாதேஷில் தேர்தல் நடக்குமாம்

டாக்கா, மார்ச், 25

பங்களாதேஷில் விரைவில் பொதுத்தேர்தல் நடைபெறும் என்று நிர்வாகப் பொறுப்பை ஏற்றுள்ள ஜெனரல் முகம்மது எர்ஷாத் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு உடன்படிக்கை ஒப்பந்தங்களில் எவ்வித மாற்றமும் செய்யப்படாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் அரசியலமைப்பு சட்டம் ரத்துசெய்யப்பட்டு இராணுவ சட்டம் அமுல்செய்யப்பட்டுள்ளது.

# இந்திய பங்களாதேஷ் உறவு

புதுடில்லி மார்ச் 25

பங்களாதேஷ் நிலைமை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் இந்தியா பங்களாதேஷ் உறவு பாதிக்கப்படமாட்டாது என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார். (க)

# கௌதமாலாவில் முன்னாள் அதிபர்

லண்டன், மார்ச். 25

கௌத்தமாலாவில் திடீர் இராணுவப் புரட்சியின் பின் பதவியிழந்த முன்னாள் அதிபர் பாதுகாப்புடன் விமான நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

ஒய்வுபெற்ற இராணுவ ஜெனரல் தலைமையில் நிர்வாக பொறுப்பு ஏற்கப்படவிருக்கிறது. (க)

# புதிய பாரத தூதுவர்

புதுடில்லி, மார்ச் 25

பாகிஸ்தானில் புதிய பாரத தூதுவராக திரு. கே. பி. சர்மா நியமிக்கப்பட்டுள்ளார் (க)

# கொலம்பியா

வாஷிங்டன் மார்ச் 25

அமெரிக்க விண்வெளிக்கலமான கொலம்பியாவில் சில நுட்பமானபிரச்னை ஏற்பட்டுள்ளதாக அதில்பயணம்செய்யும் இரு வீரர்கள் கண்டுபிடித்து கட்டுப்பாட்டு நிலையத்திற்கு அறிவித்துள்ளனர்.

கொலம்பியாவில் பொருத்தப்பட்டிருந்த கமராக்கள் சரியாக செயல்படவில்லை என்று அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

'கொலம்பியா' தொடர்ந்து விண்வெளியில் வலம் வந்து கொண்டிருக்கிறது. [க)

# ஆசிரியர்கள் வேலைநிறுத்தம்

புதுடில்லி மார்ச் 25

வடமேற்கு மாகாண பெஷாவாரியில் ஆசிரியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளைப் பிரயோகித்து பலரைக்கைது செய்துள்ளனர், (க)

# 6கோடி 80லட்சம் புசல் நெல் அறுவடை

(கொழும்பு)

கடந்த பெரும்போகத்தில் 6 கோடி 80 லட்சம் புசல் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது. வரட்சிகாரணமாக நெற்சாகுபடி பாதிக்கப்பட்டபோதிலும் இது ஒரு கணிசமான விளைச்சலாகும்.

கடந்த பேரும்போகத்தில் 1ஏக்கரில் 58 புசல் அறுவடை செய்யப்பட்டது. இம்முறை 1 ஏக்கருக்கு 60 புசல் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

மின்னேரியாவில் விவசாயிகள் 1 ஏக்கருக்கு 100 முதல் 120 புசல் நெல்லை அறுவடை செய்துள்ளனர்.

14 லட்சத்து 25 ஆயிரம் ஏக்கரில் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வரட்சியினால் 2 லட்சத்து 25 ஆயிரம் ஏக்கரில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. [க]

# பரிசின்90வீதத்தை வழங்குகிறார்

[கொழும்பு]

மஹாபொல அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பில் முதலாவது பரிசைப்பெற்றவர் பரிசின் பெறுமதியில் 90 சதவீதத்தை மஹாபொல புலமைப்பரிசில் திட்டத்திற்கு வழங்க முன்வந்துள்ளதாக வர்த்தக, கப்பல் துறையமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

தனியார் நிறுவனமொன்றின் தலைவரான இவர் மிகுதி பத்துசதவீத பணத்தை தனது நிறுவனத்தின் ஊழியர்களுக்கு பகிர்ந்தளிக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார். [வெ]

# "தொழிற் பயிற்சிகளுக்கு தொடர்ந்து நிதிஅளிப்போம்"

## சித்தன்கேணியில் "நோராட்" பிரதிநிதி

[பண்டத்தரிப்பு]

"எமது நிறுவனம் உலகிலுள்ள வளர்முக நாடுகளின் சமூக சேவைத் திட்டங்களுக்கும், அபிவிருத்தித் திட்டங்களுக்கும் நிதிஉதவி வழங்கி வருகிறது. எமது நிதி உதவிகள் சரியானமுறையில் பயன் படுத்தப்படுவதை நேரடியாக நாம் பார்க்கும்போது நாம் அடையும் மகிழ்ச்சிக்கு அளவில்லை. எமது நிறுவனம் இந்த தொழிற் பயிற்சி நிலையத்திற்கு வழங்கிய ஒன்றரை லட்சம் ரூபா நிதி உதவி நல்ல முறையில் பயன் படுத்தப்பட்டிருப்பதை நான் நன்கு அவதானித்தேன். தொடர்ந்தும் இந்த நிலையத்திற்கு உதவிகள் கிடைக்க ஆவன செய்வேன்."

இவ்வாறு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினால் சித்தன்கேணியில் நிறுவப்பட்ட தொழிற் பயிற்சி நிலையத்தில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் கலந்த கொண்டு உரையாற்றுகையில் நோர்வே நாட்லின் 'நோராட்' நிறுவனத்தின் பிரதிநிதியான திரு. ரோர் செல்விக் குறிப்பிட்டார்.

லயன்ஸ் வலையத்தலைவரும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபருமான திரு. கே. அருணசலம் தலைமையில்நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. ரோர்செல்விக் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"எமது நிறுவனம் வழங்கிய நிதிஉதவிகள் எப்படி பயன்படுத்தப்படுகின்றன என்று நேரடியாக பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நான் பல்வேறு நாடுகளுக்கும் சென்றிருக்கின்றேன். அங்கெல்லாம் எமது உதவிகள் நல்லமுறையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் போது நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம். இந்நாட்டின் கடற்றொழில் அபிவிருத்திக்கும், மற்றும் பல சமூக நலத் திட்டங்களுக்கும் எமது நிறுவனம் அதிகளவில் நிதிஉதவியளித்துள்ளது. உங்கள் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் தொழிற்பயிற்சித் திட்டங்களுக்கு எம்மாலான உதவிகளை தொடர்ந்தும் வழங்கமுடியும்"

திரு. அருணசலம் தமது தலைமைஉரையில் நோராட் நிறுவனத்தின் உதவிகளுக்கு நன்றிதெரிவித்தார். (கு)

# 40 நாடுகளுக்கு 10,000 கண்கள்!

(கம்புறுப்பிட்டியா)

"இலங்கைக் கண் தானச் சங்கம் இதுவரை 10,000கண்களை 40 நாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளது. ஜப்பான், மலேசியா, இந்தியா, சிங்கப்பூர், பாகிஸ்தான் ஆகியன இலங்கையிலிருந்து கண்களைப் பெற்ற நாடுகளில் குறிப்பிடத் தக்கவையாகும்".

இவ்வாறு இலங்கை கண் தான சங்கத்தின் தலைவர் கலாநிதி ஹட்சன் சில்வா, கம்புறுப்பிட்டியாவில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் மூன்றாவது வருடாந்தக்கூட்டத்தில் தெரிவித்தார்.

கலாநிதி ஹட்சன் மேலும் பேசுகையில்; இலங்கை கண் தானம் வழங்குவதையிட்டு வெளிநாடுகள் தமது தாராள மனப்பான்மையை வெகுவாகப் பாராட்டுகின்றன" என்றார்.

கம்புறுப்பிட்டியா கண்தான சங்கத் தலைவர் வண. கதரே சுகதபால தேரோ பேசுகையில், எமது சங்கத்தில் 525அங்கத்தவர்கள் இருக்கின்றனர். இவர்களுள் 25 கண்கள் இதுவரை தானஞ் செய்யப்பட்டுள்ளன. கண்தான பிரசாரம் செய்யப்படுவது லாப நோக்கம் கருதியல்ல. புண்ணியம் பெறுவதற்காகவே எனக்குறிப்பிட்டார். [கி]

# இன்று ஜே. பி. யாக சத்தியப்பிரமாணம்



யாழ். [illegible] வட்ட [illegible] [illegible]ரான நீதிவானுக திரு சின்னத்தம்பி இராசு நீதி அமைச்சினல் நியமிக்கப்பட்டுளள்ளார்.

கந்தர்மடம் பழம் ரோட்டைச் சேர்ந்த இவர்ஒருசிறந்த சமூக சேவையாளருமாவார்.

யாழ்.மாவட்ட நீதிபதி திரு. எஸ்.ஆனந்தக்குமாரசாமிமுன்னிலையில் திரு. இராசு இன்று காலை சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார்.

# மனிதசக்தி வள வங்கி

(கொழும்பு)

வேலைவங்கித் திட்டத்திற்கு மனித சக்தி வள வங்கி என்று பெயர் மாற்றுவது பற்றி ஆலோசிக்கப்பட விருக்கிறது. ]க]

# மே மாதத்திற்கு முன்னர் பதவி உயர்வு

[கொழும்பு]

கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த சுமார் 4,000 ஆசிரியர்களுக்கும், ஏனைய ஊழியர்களுக்கும் மேமாதத்திற்கு முன்னர் பதவி உயர்வுகள் வழங்கப்படுமென்று அரசாங்கம் அறிவித்துள்ளது. [வெ]

# நெடுந்தீவு மேற்கு கி. உ. சபைத் தலைவர்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு கிராமோதைய சபைத்தலைவராக திரு. சிவ.சங்கரப்பிள்ளை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நெடுந்தீவு ப.நோ.கூ' சங்க நெறியாளராகவும் மேற்குக் கிளை 2ன் தலைவராகவும இருந்துவரும திரு. சிவசங்கரபிள்ளை நெடுந்தீவு மேற்கு சனசமூகநிலயம், நெடுநதீவு மேற்குக் கிராம அபிவிருத்திச்

(7ம் பக்கம் பார்க்க)

# தமிழிசை விழா

(மண்டைதீவு)

மண்டைதீவு தமிழிசைச் சங்கத்தின் 13வது தமிழிசை விழா இன்றும் 26ம், 27ம், 28ம்திகதிகளிலும் மண்டைதீவு சிறுப்புலம் மைதானத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இசைவிழா முதலாம்நாள் நிகழ்ச்சிகள் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். நாகராசா தலைமையிலும் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் திரு. எஸ். வீரமணிஐயர் தலைமையிலும் மூன்ரும் நாள் நிகழ்ச்சிகள் ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் தலைமையிலும் நடைபெறவிருக்கின்றது.

இவ் விழாவில் ஈழத்தின் முன்னணி இசைக் கலைஞர்கள் பங்குபற்றவிருக்கிருர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### மீனவர் பிரச்னை:

# தீர்வு காண கடற்படை முயற்சி

(கொழும்பு)

இலங்கைக் கடல் பிராந்தியத்தில் இந்திய மீன்பிடிக்கலங்கள் ஊடுருவுவதன்மூலம் ஏற்படும் பிரச்னைகள் குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கைக் கடற்படையினர் இராமேஸ்வரம் கரையோரப் பாதுகாவல் பிரிவுடன் தொடர்பு கொள்ளவிருக்கின்றனர்.

இந்திய மீன்பிடிக் கலங்கள் அடிக்கடி இலங்கைக் கடற்பிராந்தியத்தில் ஊடுருவுவதனுல் பிரச்னைகள் தலைதூக்குகின்றன. என்றும் சிறப்பாக வடபகுதி மீனவருக்கே இத்தகைய பிரச்னைகள் ஏற்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய பிரச்னைகள் தலையெடுக்காது இரு நாட்டு மீனதர்களும் தமக்குரிய கடல் பிரதேசத்திலேயே மீன்பிடிப்பதற்கு இராமேஸ்வரம் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினருடன் கூட்டாக நடவடிக்கைகளை மேற்கொள்வது அதிக பலனைத்தருமென இலங்கைக் கடற்படையினர் நம்புகின்றனர். (கி)

### "சுமத்தப்படாத குற்றத்திற்காக

# ஊழியர் ஒருவர் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிருர்"

### வ. போ. ச. முகாமையாளர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

சுமத்தப்படாத குற்றத்துக்காக ஊழியர் ஒருவர் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிருர் என்று வட பிராந்தியப் போக்குவரத்து சபையின் செயலாற்று முகாமையாளர் தொழில் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அத்துடன், மனுதாரிலும் பார்க்கப் பாரதூரமான குற்றமிழைத்தவர்கள் வேலைநீக்கமற்ற, குறைந்த தண்டனையுடன் இன்னமும் சேவையில் இருக்கிருர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

சாவகச்சேரித் தொழில் நீதிமன்றத்தில் கே. தளையசிங்கம் என்பவர் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைக்கும், வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கும் எதிராகத் தாக்கல் செய்திருந்த வழக்கின் விசாரணையிலேயே போக்குவரத்துச் சபையின் செயலாற்று முகாமையாளர் திரு. எஸ் ராஜேந்திரம் இப்படித் தெரிவித்தார்.

இவற்றுக்கு ஆதாரமான ஒழுக்காற்று விசாரணைக் கோவைகள் அழைப்பாணையின்மீது சமர்ப்பிக்கப்பட்டுப் பரிசீலிக்கவும்பட்டபோது மனுதார் தரப்புச் சட்டத்தரணியின் இக்கூற்றுக்களை திரு. ராஜேந்திரம் தமது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டார்.

மனுதார்மீது கையாடல் குற்றமே சுமத்தப்பட்டிருந்ததென்றும் ஆனல் 'மோசடி' புரிந்தார் எனற, அவர்மீது சுமத்தப்படாத ஒரு குற்றத்துக்காகவே அவர் தண்டனைக்குட்படுத்தப்பட்டு வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் ஒப்புதல் தெரிவித்தார்.

இவ்வழக்கில் மனுதார் சார்பில் சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம், சட்டத்தரணி கிருஷ்ணகுமாரினது அநுசரணையுடனும், பிரதிவாதிகள் சரர்பில் சட்டத்தரணி சிவா. நாகராஜா, சட்டத்தரணி திருமதி விக்னேஸ்வரனினது அநுசரணையுடனும் ஆஜராகியிருந்தனர்.

இருதரப்பினரும் எழுத்துமூல சமர்ப்பணத்துக்கு அவகாசம் கோரியதை அடுத்து தொழில் நீதி மன்றத் தலைவர் திரு. எஸ். என். குருசாமி தவணை வழங்கினுர். [ம]

## திருட்டு

(சங்கானை)

சங்கானை சந்தை முன்பாக உள்ள கடை ஒன்றின் ஓடுகள் பிரிக்கப்பட்டு ரொக்கப்பணம் 12,000 ரூபாவும் செத்தல்மிளகாய் மூட்டை ஒன்றும் திருடப்பட்டுள்ளது.

கடை உரிமையாளர் சி. பசுபதி காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிசார் விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர் [கு]

### ஆயுதப் படையினரால்

# கொலையுண்ட குடும்பங்களுக்கு நிதியுதவி

[கொழும்பு]

ஆயுதப்படையினரால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஜனுதிபதி நிதியிலிருந்து நிதிஉதவி வழங்கப்படும்.

எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கையையடுத்து ஜனுதிபதி நிதியில் இதற்கான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. [இ—ம]

# மருதடி விநாயகர் உற்சவம் 29-ம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 29—ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. அடுத்த மாதம் 14—ந் திகதி தேர்த்திருவிழாவும், 15—ந் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்:

வருடாந்த உற்சவம் தொடர்பாக உதவி அரசாங்க அதிபர் தலைமையில் மாநாடு ஒன்று நடைபெற்றது. இம்மகாநாட்டில் கொடியேற்றம், தேர், தீர்த்தம் ஆகிய தினங்஗ளில் பாதுகாப்புக்காகப் போதிய பொலிஸ் உத்தியோகத்தரை அமர்த்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

போக்குவரத்துசபையுடன் தொடர்பு கொண்டு அடியார்களின் போக்குவரத்து வசதியை முன்னிட்டுப் போதிய பஸ் வண்டிகளை ஒழுங்கு செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மானிப்பாய் பட்டணசபையுடன் தொடர்பு கொண்டு இடைவிடாத மின்சார விநியோகம் செய்வதென்றும், சுகாதார அதிகாரிகளின் உதவியுடன் சுகாதாரத்தைப் பேணுவதென்றும், வழிபடும் பகுதிகளில் விற்பனையை தடைசெய்வதென்றும் இம்மாநாட்டில் மேலும் தீர்மானிக்கப்பட்டது.

ஆனைக்கோட்டை, சுதுமலை, நவாலி, மானிப்பாய், சண்டிலிப்பாய் கிராம சேவைஅலுவலர்களைப் பொலிஸாருடன் சேர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

# கம்பன் விழாவில் இன்று

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை கம்பன்கழக கம்பன் விழாவின் மூன்ரும் நாள் நிகழ்ச்சிகள் இன்றுகாலை நல்லை ஆதீன மண்டபத்தில் திரு. சு.சொக்கலிங்கம் தலைமையில் ஆரம்பமாகும்.

ஆதீன ஓதுவார் திரு. எஸ். தில்லைமணியின் பண்ணிசையுடன் ஆரம்பமாகும் அன்றைய விழாவில் திரு. நா.சுப்பிரமணிய ஐயர் வாழ்த்துரை வழங்குவார்.

இன்றைய விழா நிகழ்ச்சிகளில் ''பாரதி பாடல்களில் காலங்கடந்து நினைத்து நிற்கப்போவது பாஞ்சாலி சபதமா? குயில் பாட்டா? கண்ணன் பாட்டா? தேசியப் பாடல்களா? தோத்திரப்பாடல்களா? என்ற பொருளில் இலக்கிய ஆணைக்குழு இடம் பெறும். கலாநிதி அ. சண்முகதாஸ், திரு.இ. மகாதேவா,

(7ம் பக்கம் பார்க்க)

## தவக்கால நற்சிந்தனை



நீ மனது பொருந்தி சிலுவையைச் சுமந்து நடந்தால் அது உன்னைச் சுமந்து நீ ஆசிக்கிற கதிக்கு உன்னைக் கூட்டிக் கொண்டுபோகும். அவ்விடத்தில் எல்லாத் துன்பங்களுக்கும் முடிவு இருக்கிறது. இவ்வுலகத்தில் அப்படியாகாது ஆனல் நீ அதைக் கட்டாயத்தின் பேரில் சுமந்தால் உனக்கு அது அதிக பளுவாயிருக்கும். உன்னைத்தானே படாத கஷ்டத்திற்கு உள்ளாக்குகிருய். ஆயினும் அதைச் சுமந்துதான் தீரவேண்டியதாகும். ஒரு சிலுவையை நீ தள்ளிப்போட்டால் சீக்கிரத்தில் வேறொன்றை அடைவாய். சிலவேளை இது அதிக பளுவானதாயிருக்கும்.

(கிறிஸ்துநாதர் அநுசாரம்)


# சிங்கர் தையல் மெஷின்

வாங்குவதற்கு இலகுவான வழி

முதலில் 800 ரூபாவும்

36 மாதாந்த தவணைப் பணமும்



ஆமாம், 800 ரூபாவுடன் உங்கள் சிங்கர் வியாபாரியிடம் செல்லுங்கள். சில நடைமுறை ஒழுங்குகளைப் பூர்த்தி செய்துவிட்டு புத்தம் புதிய சிங்கர் தையல் மெஷின் ஒன்றை உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள் சிங்கர் வழங்கும் 15 NL 1 ரக மெஷினை அல்லது 15 NL 2 ரக மெஷினை நீங்கள் வாங்கலாம். மீதிப் பணத்தைக் கட்டுவதற்கு சிங்கர் உங்களுக்கு 36 மாத அவகாசம் வழங்குகின்றது. 12, 18, 24, 30 மாத கால தவணைக் கொடுப்பனவுத் திட்டங்களும் உள்ளன.

விரையுங்கள்! அற்புதமான சிங்கர் தையல் மெஷின் ஒன்றை உங்கள் உடைமையாக்கிக் கொள்ள இதுவே சுலபமான வழியாகும்.

சிங்கர் தையல மெஷின் ஒன்றை வைத்திருக்க வேண்டும் என்பது ஒவ்வொரு இல்லத்தரசியினதும் ஆசைக்கனவாகும். இந்தக் கனவு பலிக்க வேண்டும் என்பதே சிங்கரின் இலட்சியமாகும். தாமதியாதீர்கள்! இப்பொழுதே அண்மையிலுள்ள சிங்கர் வியாபாரி யுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

SINGER SEWING MACHINES *சிங்கர்

* சிங்கர் நிறுவனத்தின் பதிவுசெய்யப்பட்ட வர்த்தகச் சின்னம்.

ரொக்க விலை; 15 NL 1 ரூ. 2,870/=

15 NL 2 ரூ. 2,490/=

(2634)

# சீமெந்துப் பெருந்தொழிலில் நீங்களும் முதலிடலாம்

அதிகரித்துவரும் சீமெந்து தேவையை உள்ளூர் உற்பத்தி சமாளிக்க முடியாமலிருக்கிறது.

இதனையும், காலப்போக்கில் இது மேலும் கூடும் என்பதையும் அறிந்துள்ள இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம், இவற்றை நிறைவேற்றுவதற்காக லங்கா சீமெந்து லிமிட்டெட்டை ஆரம்பித்துள்ளது.

தொழிற்சாலை, துறைமுகப்பாலம், மற்றும் துணைச்சேவைகளைக் கொண்ட முற்றிலும் தன்னியக்க முறையில் அமைந்த தொகுதி ஒன்றினை, லங்கா சீமெந்து லிமிட்டெட் காங்கேசன்துறையில் பெருமளவிற்குப் பூர்த்திசெய்துள்ளது.

திட்டத்தின் 1 வது கட்ட வேலைகள் இந்த ஆண்டு ஆரம்பித்ததும் 500,000 தொன் உற்பத்தி செய்யப்படும். 1983, ஜூன் மாதத்தில் முடிவடையும் 2 வது கட்டத்தில் உற்பத்தி இரண்டு மடங்காக, அதாவது வருடாந்தம் 10 லட்சம் தொன் உற்பத்தி செய்யப்படும்.

இலாபம் தரும் இந்த முயற்சியில் நீங்களும் சேருங்கள். ஒவ்வொன்றும் 10 ரூபா பெறுமதியான 1.2 கோடி பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. பங்கு வழங்குகையின் மொத்த பெறுமதி 30 கோடி ரூபா. முதல் ஆண்டிலேயே பங்கிலாபம் பெறும் வாய்ப்புண்டு.

## முதலீட்டு நிவாரணமும் வரிச் சலுகைகளும்

- வரிமதிப்பிடற்குரிய வருமானத்தின் 1/3 பகுதிவரை முதலீட்டு நிவாரணம்
- கம்பெனியின் இலாபங்களின் மீது ஐந்து வருட வரி விடுமுறை
- ஐந்து வருடங்களுக்கு பங்கிலாபங்களுக்கு வரி விலக்கு
- வரி விடுமுறைக்குப் பின்னர் குறைந்த வீத வரி மதிப்பு
- வரி விடுமுறைக்குப் பின்னர் பங்கிலாபங்களின் மீதான வரி நிறுத்திவைக்கப்படமாட்டாது
- வதிவு கம்பெனிகள் பெறும் பங்கிலாபங்களுக்கு வரி இல்லை
- மூலதன இலாபங்களுக்கு வரி இல்லை

பங்கு வழங்குதல் மார்ச் 3 முதல் 1982 ஏப்ரல் 30 வரை

முதலீடு செய்வது பற்றிய விபரங்களைத் தரும் முற்பகர்வின் இலவச பிரதிக்கு இங்கு தரப்பட்டுள்ள கூப்பனை அனுப்பி வையுங்கள்.

நிர்வாக ஆலோசனைப் பிரிவு,
இலங்கை வங்கி,411, காலி வீதி,கொழும்பு - 3

லங்கா சீமெந்து லிமிட்டெட் பங்கு வழங்குகை மீதான முற்பகர்வின் பிரதியொன்றையும் பங்குகளுக்கான ..............விண்ணப்பப் படிவங்களையும் தயவு செய்து அனுப்பி வையுங்கள்.

பெயர் : ..........................................

முகவரி: ..........................................

லங்கா சீமெந்து லிமிட்டெட்டுடன் சேர்ந்து உறுதியான எதிர்காலத்தை கட்டியெழுப்புங்கள்

**லங்கா சீமெந்து லிமிட்டெட்**
அல்மனார் கட்டிடம்,302, காலி வீதி,
கொழும்பு - 4. தொலைபேசி: 589126



Phoenix

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
அஜாசத்ரு
(தமிழ்)

**லிடோ** (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
பூந்தளிர்

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
The Shaul of Niggar Charley

**சாந்தி** (யாழ்ப்பாணம்) 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன்-சுஜாதா-ஜெய்கணேஷ்-ஸ்ரீபிரியா
அவள் ஒரு தொடர்கதை
இந்தியாவிலிருந்து தருவித்த புதிய பிரதி

கடைசி வாரம்
**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
பிரதாப் சுரேகா
தக்காரா
(கலர்—மலையாளம்) (இளமை—சுகம்)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

2-வது ஜனத்திரள் மாதம்
50-வது நாளைத் தாண்டி 100-வது நாளை நோக்கி
வெற்றிகரமாகப் பறந்துகொண்டிருக்கின்றன
உல்லாசப் பறவைகள்
**ராணி** (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

**ஸ்ரீதர்** தினசரி 10.30, 2.00, 4.30, 7.00 9.45
ROGER MOORE in
THE SPY WHO LOVED ME
JAMES BOND 007
(Passes and Concessions Suspended)
அதிபயங்கரக் காட்சிகள் நிறைந்தது

வெகு விரைவில்
ரஜனிகாந்த் நடித்த
பொல்லாதவன்

**ஹரன்** யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — பத்மினி
பேசும் தெய்வம்

**வெஸ்லி** சுன்னாகம்
தினசரி: 2.30 6.15 9.15
ரஜனிகாந்த்—சீமா
காளி

7 வது வாரம்
யாழ்.றீகல்
தினசரி 10—30, 2—30, 6—30, 9—30
தனிமரம்

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4காட்சிகள்
10 30 2.30. 6 30, 9.30



பல வெற்றிப் படங்களை அளித்த வின்ஸர் ஸ்தாபனத்தாரின்
மகத்தானபுதுவருட வெளியீடு
இன்று முதல் குதூகல ஆரம்பம்
தென்னகத்தில் ஒளிவீசும் நட்சத்திரங்கள்:
கமல்—ரஜனி— எம். ஜி. சுகுமார்—நாகேஷ்— ஜெய்சங்கர்—ஸ்ரீபிரியா—
கே. ஆர். விஜயா— சாவித்திரி— மஞ்சுளா—
கௌரவ நடிகர்:
சிவாஜி -- எம். ஜி. ஆர்.
நடித்த
★ நட்சத்திரம் ★
(ஈஸ்மன் கலர்)
இசை: சங்கர் கணேஷ்

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 13ம் திகதி
வெள்ளிக்கிழமை
(26—3—82)

மேடம்: எளிமையான சூழ்நிலை இன்று உருவாகும். மற்றவர்களின் அன்பும் ஆதரவும் இன்று தாராளமாகக் கிடைக்கும். இருமனம் கலந்தவர்களின் மத்தியில் இனிமையான சம்பவங்கள் இடம் பெறும்.

இடபம்: கன்னியர்கள் சகவாசம் சங்கடத்தில் மாட்டி வைக்கும் அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் விளையலாம். எதிரிகளின் சூழ்ச்சி மனதில் நிம்மதியை குறைக்கும்.

மிதுனம்: வாகனசாரதிக்கு இன்று சிறப்பான தினம் வரவிலும் திருப்திகாணப்படும். தாய்வழி மூலம் சிலருக்கு தனலாபமும் கிடைக்கும்.

கடகம்: மகிழ்ச்சி கரமான தினம். குடும்பத்தில் விருந்தினர் வருகையால் கலகலப்பு ஏற்படும். நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள். கணவன்-மனைவி உறவு மிகவும் நெருக்கமாக இருக்கும்.

சிங்கம்: பணம் பல வழிகளிலும் செலவாகும். அன்னிய நபர் ஒருவரால் ஏமாற்றம் அடையக்கூடும். உமது நடவடிக்கைகளை எதிரிகள் வேவுபார்ப்பர். பிரயாணத்தின் போது பொருள் நழுவக்கூடும்,

கன்னி: களஸ்திர வழியால் மகிழ்ச்சிக்கிடமுண்டு. பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். காதலர்கள் வாழ்வில் தித்திப்பான சம்பவங்கள் இடம்பெறும். புத்திர வழியாலும் மகிழ்ச்சி உண்டு.

துலாம்: அரச பயத்துக்கிடமுண்டு. வழக்கு விவகாரங்களில் தலையிட்டுக் கொள்ள வேண்டாம். மின்னியல்பொறியியல் பகுதிகளில் அதிக கவனம் செலுத்தவும்.

விருட்சிகம்: திருப்திகரமான திருப்பத்திற்கு இடமுண்டு. விருந்தினர்களின் வருகைக்கு உறவினர்களின் வருகைக்கும் உறவினர்களின் ஆதரவுக்கும் இடமேற்படும். பரோபகாரசிந்தை மேலிடும். மகிழ்ச்சிகரமான தினம்.

தனு; செய் தொழில் மூலம் சிறப்புக்கிடைக்கும் பெரியவர்களின் ஆசி அவசியம் உண்டு. போட்டா போட்டிகளில் வெற்றி வீரர் முதலிடத்தைப் பெறுவர்.

மகரம்: வரவிலும் உயர்வு தென்படும். எழுத்தாளர்களுக்கு புகழ் குவியும். நல்ல நாள்.

கும்பம்; வாய்வு கோளாறு உடல் நலத்தைப் பாதிக்கலாம். உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும். தானிய நஷ்டத்துக்கு இடமுண்டு. வியாபாரிகள் புதிய முதலீட்டைத்தவிர்த்துக்கொள்ளவும்.

மீனம்: ஆசை அலைகள் மோதும். வாழ்க்கையில் திருப்தியற்ற நிலை தென்படும். அவசரப்போக்கு பிறரை பகைத்துக்கொள்ள நேரிடும். மனவடக்கம் நன்று.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# 12 ஆண்டுகள் சாம்பியன்



(யாழ்ப்பாணம்)

விளையாட்டமைச்சின் ஆதரவில் நடத்தப்பட்ட சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மெய்வல்லுநர் போட்டிகளில் பெரிய விளான் உதய சூரியன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த திரு. வீ. விக்கிரமசிங்கம் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

12 ஆண்டுகள் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டஇவர் இவற்றுள்8ஆண்டுகள் தொடர்ந்து சாம்பியனாகத் திகழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

81ம் ஆண்டு 3 முதல் இடங்களையும், அண்மையில் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் இரண்டு முதல் இடங்களையும், இரண்டாமிடம் ஒன்றையும் பெற்று இவ்விரு ஆண்டுகளுக்குமான சாம்பியனாகத் தெரிவாகியுள்ளார்.

1962ம் ஆண்டு முதல் 67ம் ஆண்டுவரைஉதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றிய திரு. வீ. விக்கிரமசிங்கம் 1962ம் ஆண்டு சிறந்த உதைபந்தாட்ட வீரருக்கான விருதைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. சில கல்லூரிகளில் விளையாட்டுத் துறை ஆசிரியராக கடமையாற்றிய இவர் வசாவிளான் மத்தியமகாவித்தியாலயவிடுதி ஆசிரியராகவும் விடுதி மாணவ விளையாட்டுத்துறை ஆசிரியராகவும் பணிபுரிந்தவராவார். (கி)

# கிராண்ட் சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

கேரளத்திலுள்ள கோட்டயம் வை. எம். சி. ஏ. யில் கடந்த மாதம் நடைபெற்ற கராட்டிப் போட்டி 60 கிலோ கிராமிற்கு மேற்பட்ட பிரிவில் திரு. கு. கிஷோர் குமார் கிராண் சாம்பியனாக தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் பட்டப் படிப்பை மேற்கொண்டுள்ள இவர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர் திரு. வீ. குணரத்தினம் தம்பதிகளின் மூத்த புதல்வராவர்.

இப்போட்டியில் இவரது சகோதரர் திரு. கு. சுரேஷ்குமார் இரண்டாவது இடத்தைப்பெற்றார்.

இப்போட்டியில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் முதலான நாடுகளைச் சேர்ந்த 100 கறுத்தப்பட்டி கராட்டி வீரர்கள் பங்கு பற்றினர். இலங்கையிலிருந்து 10 கறுத்தப்பட்டி கராட்டி வீரர்கள் கலந்துகொண்டனர்.

இப்போட்டியில் கிஷோர் குமார் சகோதரர்கள் இந்தியாவின் சார்பில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. (அ)

# சதுரங்கப் போட்டி

(மாவிட்டபுரம்)

வர்த்தலை விளான் வாலிபர் சங்க சதுரங்கக் கழகம் ஏப்ரல் மாதம் 3ம்திகதி முதல் 11 ம் திகதிவரை சதுர்ங்கப்போட்டியொன்றை நடாத்த ஏற்பாடு செய்துள்ளது. தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் இப்போட்டி நடைபெறும்.

# கிரிக்கட் சுற்றுப்போட்டி

[மாவிட்டபுரம்]

குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தால் வருடாவருடம் நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றும்போட்டி இம் முறையும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 7 ம் திகதி இப்போட்டி ஆரம்பமாகிநடைபெறும். இட்பகுதியைச்சேர்ந்த பிரபல கிரிக்கெட் கோஷ்டிகள் இப்போட்டியில் பங்குபற்ற உள்ளன. (அ)

# கிறிஸ்தவக் கல்லூரி முன்னணியில்

[அரியாலை]

கோப்பாய் வட்டார பயிற்சிப்போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி 17 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் முதலாவதிடத்தையும், 13வயதுக்குட்பட்ட ஆண்கள்பிரிவில் முதலாம் இடத்தையும்பெற்று முன்னணியில் திகழ்கிறது இப்போட்டி கிறிஸ்வதக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்றது.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு வி. தங்கராாசவும், உடற் கல்வி அதிகாரி திரு.வி.கணேசலிங்கமும் அதிதிகளாகக்கலந்து கொண்டனர்.

கோப்பாய்த் தொகுதியைச் சேர்ந்த அநேக பாடசாலைகளின் உடற்பயிற்சிக் குழுக்கள் கலந்து கொண்ட இப்போட்டியில் முதலாவதுஇடத்தைப் பெற்றுக்கொண்டகோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக் குழுக்கள் யாழ். மாவட்டப் போட்டியில் கலந்து கொள்ளத்தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நெடுந்தீவு...

(3ம் பக்கத் தொடர்ச்சி)
சங்கம் ஆகியவற்றின் செயலாளராகவும் நீண்டகாலம் பதவி வகித்தவராவார். இவரது பதவிக்காலத்தில் கிராமஅபிவிருத்திச்சங்கம் தனது பகுதியில்பல்வேறு சிரமதான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (அ)

## தங்க நகைகளுக்கும் தங்க கட்டிகளுக்குமான பணவசதி

**த பினான்ஸ் கம்பனி**

வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக
தங்க நகைகளுக்கும்,
தங்க கட்டிகளுக்குமான
பணவசதி

வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
விற்பனை முகாமையாளர்,

**த பினான்ஸ் கம்பனி லிமிட்.**

249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7680

## அகில உலக இந்து மாநாடு - 1982
## கொடிநாள் 2-4-1982

அகில உலக இந்து மாநாட்டை முன்னிட்டு 2—4—82ல் நடைபெறவிருக்கும் கொடிநாளன்று கொடி விற்பனையில் ஈடுபடவிருக்கும் தொண்டர்கள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள் பின்வரும் இந்து நிறுவனங்களிலும் கொடிகளை பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணம்:— நல்லை ஆதீனம், நல்லூர்.
சைவச் சிறுவர் இல்லம், கைதடி.

வவுனியா:— இந்து இளைஞர் மன்றம்,
வவுனியா.

முல்லைத்தீவு:— தண்ணியூற்று இந்து இளைஞர் மன்றம், முள்ளியவளை.

மன்னார்:— தேவஸ்தானம், திருக்கேதீஸ்வரம்.

மட்டக்களப்பு:— சைவ இளைஞர் மன்றம்,
மட்டக்களப்பு.
இந்து இளைஞர் மன்றம்,
பாண்டிருப்பு.
திருநாவுக்கரசுநாயனார் குருகுலம்,
பொத்துவில்.

கிளிநொச்சி:— மகாதேவ ஆஸ்சிரமம்,
கிளிநொச்சி.

அம்பாறை:— இந்து இளைஞர் மன்றம், கல்முனை.

திருகோணமலை:— இந்து இளைஞர் மன்றம்,
திருகோணமலை.

மாத்தளை:— இந்து இளைஞர் பேரவை,
மாத்தளை.

கண்டி:— அகில இலங்கை இந்து சமாஜ்,
கண்டி.

மலையகம்:— ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி.
இந்து மாமன்றம், அட்டன்.
சைவ மகாசபை, நோர்வூட்.
சைவ இளைஞர் மன்றம்,
அப்புத்தளை.
இந்து இளைஞர் மன்றம்,
பண்டாரவளை.

கொடிகளை நேரடியாக பெற இயலாதவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**கொடிநாள் செயலகம்,**
இந்துசமயத் திணைக்களம்,
பிரதேச அபிவிருத்தி அமைச்சு,
த. பெ. இல: 1700, கொழும்பு 4.

ஆறுமுகம் கந்தையா,
அமைப்பாளர்.
(2652)

## கம்பன்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)
திருமதி வஸந்தா வைத்தியநாதன் ஆகியோர் ஆணையாளராக விளங்குவர்.

'கந்தர்நுபூதி' என்றபொருளில் பேராசிரியர் இர. இராதாக்கிருஷ்ணனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெறும்.

இன்றைய விழாவின் மாலை நிகழ்ச்சிகள் திரு.என்.கே.பத்மநாதன் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும். திருமதி வஸந்தா வைத்தியநாதன் தலைமை தாங்குவார். 'வேரித்தாரன்' என்னும் பொருளில் பேராசிரியர் இரா. இராதாக்கிருஷ்ணன் சொற்பொழிவாற்றுவார். (கி)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றம்

கம்பர்மலையைச் சேர்ந்த காலஞ் சென்ற தம்பு சுந்தரலிங்கத்தின் மரண சாதனம் சம்பந்தமாக:

சுந்தரலிங்கம் கைம்பெண் அன்னம்மா கம்பர்மலை.

மனுதார்.

மரணசாதன )
நியாயாதிக்கம்) இல: 1128/
**Testy.**

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேர்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு சித்திரை மாதம் 2ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இம்மன்றில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

மன்றத்தின் கட்டளைப்படி
கே. செல்வராசா
பதிவாளர்

வரைவு
ஏ. என். இராமச்சந்திரன்
மனுதாரின் சட்டத்தரணி.
2655

## கேள்வி விளம்பரம்

### லொறி விற்பனைக்கு
### இசூசு மொடல்
### 24 ஸ்ரீ 8495

மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணம் ரூபா 2000/— வைப்புச் செய்து ரூபா 5/— செலுத்தி கேள்வி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று 06.04.82க்கு முன் பதிவுத் தபாலில் தலைவர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

லொறியை நேரில் பார்வையிட விரும்புவோர் காரியாலய நேரங்களில் பார்வையிடலாம்.

ரூபா 85,000/—க்கு மேல் ஆகக்கூடிய கேள்வி கோருபவருக்கே லொறி விற்பனை செய்யப்படும்.

மேலதிக விபரங்களுக்கு சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்.
புலோலி பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.
1982/03/23. 2651

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

# வரி விளம்பரம்

## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு வியாபார அனுபவத்துடன் ஆங்கில அறிவும் மின்சார உபகரணங்களைப் பற்றிய அறிவுமுள்ள முப்பது வயதுக்குக் குறைந்த ஆண்கள் தேவை. எதிர்பார்க்கும் சம்பளத்துடன் உறவினரல்லாத இருவரின் நற்சாட்சிப்பத்திரங்களுடன் 29—03—82 க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2632, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.
[2632]

## பயிற்சி

**French - German** வகுப்புக்கள் ஆரம்பம் 29 - 3 - 82 குறுகிய காலத்தில் இலகு முறையில் கற்பிக்கப்படும். இருபாலாரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, [விவேகானந்த அச்சகம் முன்பாக] 11, மொம்சாக் கட்டிடம் ஸ்ரான்லிறேட், யாழ்ப்பாணம். (2635)

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கில் வசித்த, காலஞ் சென்ற சின்னையா அருளம்பலம் பெண் பரமேஸ்வரி என்பவரின் மரண சாதனத்தின் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன
நியாயாதிக்கம்
வழ. இல. 3642,
எதிராக
சின்னையா அருளம்பலம்
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்
மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்டமரணசாதன வழக்கு மேலேபெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரண சாதனத்தை என்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளையை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

நீதிமன்றக் கட்டளைப்படி,
தா. குலஞானம்
பதிவாளர்
1981ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30ந் திகதி.
2646

## விற்பனைக்கு

கொக்குவில் குளப்பிட்டிச் சந்திக்கருகாமையில் கே. கே. எஸ். வீதியில் ¼ பரப்புக்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு, ந. விபுலானந்தன், வன்னியசிங்கம் வீதி, தாவடி, கொக்குவில். 2660

## பின்னுறுதிக்கட்டளை, பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

கொக்குவில் மேற்கு துரையப்பா பாலசுப்பிரமணியம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்துக்களும் உடமைப் பொருட்களினதும் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

வழக்கு இல: 3249/ தத்துவம்
துரையப்பா பாலசுப்பிரமணியம் கைம்பெண் விமலா தேவி.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில், தொடுக்கப்பட்டு இதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982ம் ஆண்டு பங்குனி மாதம் 26ந் திகதியன்று முற்பகல் 9.00மணிக்கு முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

1982ம் ஆண்டு பங்குனி மாதம் 24ந் திகதி இந் நீதிமன்ற உத்தரவுப்படி.

கோ. ஆ. கந்தசாமி
பதிவாளர்
என்னால் வரையப்பட்டது:
சி. சிதம்பரநாதன்
மனுதாரின் சட்டத்தரணி.
2654

## இரவில் ஊரடங்கு

டாக்கா, மார்ச். 25

பங்களாதேஷில், இரவில் 7 மணிநேர ஊரடங்கு சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றிரவு அமுலுக்குவந்த ஊரடங்குச்சட்டம், இன்று காலை 5 மணியுடன் முடிவுக்கு வந்தது.

**சிசில் (SISIL) குளிர்சாதனப் பெட்டிகள்**
பணம் கட்டிய உடனே கொடுக்க முடியுமென மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
ஒரு வருட உத்தரவாதமும் விற்பனைக்குப்பின் சேவையும் உள்ளது.
வடமாகாண விநியோகஸ்தர்கள்:
**சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிட்டெட்**
484, ஆஸ்பத்திரி திவீ, யாழ்ப்பாணம்.

## இன்று

நாடக, அரங்கக் கல்லூரி
ரசிகரவைக்காகத் தயாரித்தளிக்கும்
**"குருசேத்திரோபதேசம்"**
நாடகம்
நெறியாள்கை: சி. மௌனகுரு
26-03-82 பிற்பகல் 6-45
வீரசிங்கம் மண்டபம்
5/—, 3/— (ரசிகரவை உறுப்பினர்களுக்கு இலவசம்)
(2663)

# மலையகமக்கள் வாழும் பகுதியில் அத்துமீறலாம்

## அரசஅதிபருக்கும் எம். பி.க்கும் புகார்

(வவனியா)

கடந்த 1977 ஆகஸ்ட் இனக் கலவரத்திஞல் பாதிக்கப்பட்ட மலையக மக்கள் வவனியாவில் குடியேறியுள்ளபிரதேசங்களில் சிங்கள மக்கள் ஊடுருவல் செய்வதாகப் புகார்செய்யப் பட்டுள்ளது

காந்திய சேவையினரின் உதவியுடன் நித்தியநகர், மணியளர்குளம் (பண்ணை) முதலான கடந்தநான்கு வருடங்களாகத் தமிழ்மக்களின் பராமரிப்பிலிருந்த காணிகளில் வாரிக்குட்டியூர் சிங்கள மக்கள் அத்துமீறித் தொந்தரவு கொடுப்பதாக வவனியா அரசாங்க அதிபருக்கும், வவனியா பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரத்துக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (கு)

## அரிசி ஆலையை சுன்ஞகம் ப.நோ.கூ.ச. பொறுப்பேற்றது

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இதுவரை காலமும் இயங்கிவந்த 'மாக்பெட்' நிறுவனத்தாரின் அரிசி ஆலையை சுன்ஞகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் பொறுப்பேற்றுள்ளது. இந்த அரிசி ஆலையின் பெறுமதி 10 லட்சம் ரூபாவாகும்.

இந்த அரிசி ஆலையிலிருந்து வடபகுதிலுள்ள ப நோ, கூ. சங்கங்களும் அரிசி பெறுவதற்கான நடவடிக்கை எடுக்க விருப்பதாக, யாழ். கூ. உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

சுன்ஞகம் மின்சார நிலையத்துக்கருகாமையில் உள்ள இரண்டு ஏக்கர் காணியில் இந்த அரிசி ஆலை அமைந்துள்ளது.

இந்த அரிசிஆலையில் சுமார் 25க்குமேற்பட்டோருக்குவேலை வாய்ப்புக் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரிசித்தட்டுப்பாடு ஏற்படும் காலத்தில், சில தனியார் அரிசி ஆலை உரிமையாளர்கள், அரிசியைஅதிகவிலைக்குவிற்பதஞல் பாவனையாளர்கள் மிகவும் கஷ்டநிலைக்குள்ளாவதை கருத்தில்கொண்டே, சுன்ஞகம் ப. நோ. கூ. சங்க தலைவர் திரு. க. முத்துலிங்கமும், உபதலைவர் திரு. சி. குமாரவேலும் இச்சாலையை பொறுப்பேற்றுள்ளனர். (மா)

## நல்லை ஆதீனத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை

[யாழ்ப்பாணம்]

நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாச்சாரியசுவாமிகளின் சமாதியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 28ந் திகதி காலை 9 மணியளவில் சிவலிங்க பிரதிஷ்டையும் மகாகும்பாபிஷேகமும் நடைபெறும்.

இவ்வைபவத்தைமுன்னிட்டு இன்றும், நாளையும் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் விசேடகிரியைகள் காலை முதல் மாலைவரை நடைபெறவிருக்கின்றன. [கி]

வவனியா மாவட்டத்தில்

## புதிதாக வாகனம் வாங்கிய ஐவர் விசாரணையில்!

[வவனியா]

வவனியா மாவட்டத்தில் புதிதாக வாகனங்களைச் சொந்தமாக வாங்கிய 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடபகுதியில் நடந்த கொள்ளைகளைத்தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் இந்த 5 பேரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர். (க)

## ஊழியர்களின்சாதுரியம்: கொள்ளையர் தப்பிஓட்டம்!

[பச்சிலைப்பள்ளி]

பளை பெற்ரேல் நிலையக் கொள்ளையர்களைத்தேடி சாவகச்சேரி பொலிசார் தீவிரவேட்டையில் இறங்கியுள்ளனர்.

இரவு ஒருமணியளவில் பளையிலுள்ள தனியார் பெற்ரேல் நிலையத்திற்குள் புகுந்த துப்பாக்கி இளைஞர்கள் இருவர் அங்கிருந்த ஊழியரிடம் துப்பாக்கியைக்காட்டி 'மேசை லாச்சியைத்திற' என்று பயமுறுத்திஞர்களாம். ஊழியர் துப்பாக்கிக்குழலைப் பிடித்துக் கொண்டு சத்தம் போடவே, இதனைக்கேட்டு பெற்ரேல் நிலைய அறைக்குள்படுத்திருந்த மற்றைய இரு ஊழியர்களும், அயலில் உள்ளவர்களும் ஓடிவர துப்பாக்கிகொள்ளையர்கள் இருவரும் துப்பாக்கியைப் பறித்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டு நழுவிவிட்டார்களாம்.

## ஆயுதம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாகத்திற்கு எதிராக இயங்கும் அரசியல் தலைவர்களுக்கும். அதிகாரிகளுக்கும் ஆயுட் தண்டனை விதிக்கப்படுமென்றும், அவர்களது சொத்துக்கள் பறிமுதல்செய்யப்படுமென்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

உடனுக்குடன் விசாரணை நடத்தித் தீர்ப்பளிக்க விசேட நீதிமன்றங்களும் அமைக்கப்படவிருக்கிறது. (க)

# யாழ். நகரில் முழுஅமைதி: சமாதானக்குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ்ப்பாணத்தில் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்ட இருபகுதி மக்களும் சமாதானத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்வதாகவும் ஏனைய பகுதி மக்களும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அமைதியையும் ஒற்றுமையையும் பேணிப் பாதுகாக்குமாறும் இரு சமூகத்தவரையும் சார்ந்த சமாதானக் குழுவினர் கூட்டாக வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

யாழ். செயலகத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற சமரச.மாநாட்டைத் தொடர்ந்து இக்கூட்டுவேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

செயலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் யாழ்ப்பாண எம். பி. திரு, வெ. யோகேஸ்வரன், நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், கோப்பாய் எம். பி. மு. ஆலாலசுந்தரம், யாழ். மேயர் திரு. ஆர். விசுவநாதன் மற்றும் மாநகரசபை ஆணையாளர், மாநகரசபை உறுப்பினர்கள், மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர்கள் வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர், பொலிஸ் அதிபர், உதவி அரசாங்க அதிபர்கள் கிராம சேவையாளர்கள் இருபகுதி மக்களினதும் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். கூட்டணி அமைப்பாளர் திரு. வே. அப்பையா: தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூ. சங்க தலைவர் திரு. இ. தர்மகுலசிங்கம், கண்ணுபுரம் நலப் புரிச் சங்கத்தைச் சார்ந்த திரு. சி. சின்னராசா கொட்டடி முத்தமிழ் சனசமூக நிலைய தலைவர் திரு. ஆ. ஐயாத்துரை நாவாந்துறை கலைவாணி சனசமூகநிலைய செயலாளர் திரு. ஏ. பி. நாசராசா மாநகர சபை உறுப்பினர்களான ஜனுப் பாஸா முகைதீன் பிச்சை, ஜனுப் கே. எம். சாகுல் ஹமீது, ஜனுப் ஆர். எம். இமாம், இலங்கை வாலிபர் சங்க சம்மேளன தலைவர் எம். ஏ. சி. இக்பால் அபிவிருத்தி சபை உறுப்பினர் ஜனுப் எஸ். எம். சுல்தான் ஆகியோர் இக்கூட்டு வேண்டுகோளை விடுத்துள்ளனர். (மா)

## காண்டைபிள்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுவருகிருரென்றும் சொல்லப்படுகிறது. அண்மையில் நழுலூர் கல்யாண மண்டபத்ல்ற்கு அருகாமையில் இவர் நடமாடுவதாகக் கிடைத்த தகவல் ஒன்றின்பேரில் இவரைத் தேடிச்சென்ற இராணுனத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இவர் கையில் காயமேற்பட்டும், தப்பி ஓடிவிட்டாரென்றும் கூறப்படுகிறது

தடைசெய்யப்பட்ட இயக்கத்தோடு சம்பந்தப்பட்ட இவர், தனியார் கல்லூரியில் ஆசிரியராசுப் பணிபுரிந்தவராம்.

இவர் கைதுசெய்யப்படும் பட்சத்தில் முக்கிய தகவல்கள் வெளியாகுமென்று பொலிஸ் வட்டாரங்களில் தெரிவிக்கப் பட்டது.

குறிப்பிட்ட பகுதிகளில் பொலிஸாரும், இரா ணு வத்தினரும் கூட்டாகத் தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர்.

## ஹன்சாட்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ள ரிட் மனு மீதான விசாரணையில் மேன்முறையீட்டு நீதியரசர்கள் தீர்ப்பளித்திருந்தனர். விசாரனை இன்று தொடர்கிறது.

## புளியங்குளம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் தெரிவிக்கப்பட்டது.

பண்ணையில் நடைபெற்ற 'வேட்டை'யில், தோட்டாக்கள், வெடிமருந்துகள், குண்டுகள்கைப்பற்றப்பட்டன என்று ஆயுதப்படையினர் நேற்று தெரிவித்தனர்.

இது குறித்து உயர் அதிகாரி ஒருவர் நேற்றிரவு 'ஈழநாடு' விடம் தெரிவிக்கையில் புளியங்குளம் வேட்டையில் கைப்பற்றப்பட்ட வெடிமருந்துகள் சக்திவாய்ந்த குண்டுகள் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்பட்டன என்று கூறிஞர்.

இதுசம்பந்தமாக உடனடியாக எவரும் கைது செய்யப் படவில்லை.


மிகவும் குறைந்த
விசேட
விமானக் கட்டணங்கள்
யாழ்ப்பாணத்தில்
மக்கினென்ஸ் வழங்குகிறது
★ சிங்கப்பூர் கூட்டாகச் செல்வோருக்கு
(GROUP TICKETS) மிகவும் கூடிய கழிவுடன்
மற்றும் ஃ மத்திய கிழக்கு ஃ லண்டன்
உலகின் எப்பாகத்துக்கும்
விரும்பிய விமானத்தில்
விமான டிக்கட்
ஃ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரதிநிதிகளான
எம்மிடம்
வங்கியில் அறவிடும்
அதே கட்டணத்தில்
பிரயாணக் காசோலைகள்
(TRAVELLERS CHEQUES)
நாடுங்கள்
மக்கினென்ஸ் ட்றவல் சேவிஸ் (சிலோன்) லிமிட்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண் 92 தொலைபேசி: 8154



மீண்டும் ஆரம்பம்!! சிறந்த சேவை.
போட்டோஸ்ரட் பிரதிகளுக்கு
மகாராஜா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டெட்
122, கே. கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 8267


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை அமிர்தலிங்கம்

ஆனைக்கோட்டை மூத்தனுர் கோவிலடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அமிர்தலிங்கம், (மூத்தனுர் கோவில் கணக்கப்பிள்ளை) காலமானுர். இவர் கமலாம்பிகையின் அன்புக்கணவரும், திருநாவுக்கரசு, கருணேஸ்வரி, மங்கையற்கரசி, பாலசுப்பிரமணியம், குகமூர்த்தி, சண்முகராஜா, மங்களேஸ்வரி, நாகேசன், சரோயினிதேவி, கம்சநந்தினி, ஆகியோரின் அன்புத் தந்தையும். நமசிவாயம், காலஞ்சென்ற கே. பி. சுந்தரலிங்கம்பிள்ளை, கமலாம்பிகை, வளர்மதி, அமிர்த கணேஸ்வரி, காலஞ்சென்ற மாணிக்கம்பிள்ளை, சற்குணதேவி, நடராசா ஆகியோரின் மாமனுருமாவர். ஈமக்கிரியைகள் இன்று [26—3—82) அன்று அன்னரின் இல்லத்தில் நண்பகல் நடைபெறும். 2669

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் மார்ச் மீ 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper. The General P.O. Sri Lanka. Regd. Q. B. 100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 77 07, 889, 8126.